பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 13 செவ்வாய்க்கிழமை (29-08-2000) தொ. பேசி; 3378 ஒலி: 253

★ மாதுலுவாவேசோபிததேரர் என்னுடன் ★

# வடபகுதி யுத்தமுனைக்கு வருவாரா? ஜனாதிபதி புத்தபிக்குவிடம் கேள்வி!

(கொழும்பு)

**வடபகுதியில் இடம்பெறும் யுத்த களத்திற்குச் செல்வதற்கு நான் தயா தயாராகஇருக்கிறேன். எனக்குப் பின்னால் மாதுலுவாவே சோபித தேரர்யுத்தகளத்திற்குவரத்தயாராக இருக்கிறாரா?**

**விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லுமாறும் கூறும் பௌத்தபிக்கு அந்த யுத்தத்திற்கு ஆயிரம் வீரர் களைத்திரட்டித்தரமுடியுமா? இந்த இரண்டில் எதையாவது அவர் செய்வாரா?**

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கா சுதந்திரக் கட்சி கூட்டமொன்றில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா இக் கூட்டத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது;

மாதுலுவாவே சோபித தேரர் இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலமே தீர்க்க வேண்டுமெனக் கூறி வருகிறார். அப்படியாயின் நான் வடமுனை யுத்த களத்துக்குச் செல்வதற்கு தயாராகவுள்ளேன். அவரும் அதற்குத் தயாராக இருக்கின்றாரா?



நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சியின்பாணியில் கையாண்டிருந்தால் இன்று நாட்டின் நிலைமை தலைகீழாக மாறியிருக்கும்.

இன்று நடைபெற்று வரும் யுத்தத்தினால் அப்பாவி பௌத்த சிங்கள இளைஞர்களே பெருமளவு பலியாகி வருகின்றனர். இதனை அடிப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயக இடதுசாரி முன்னணி யாழில். நேற்று வேட்புமனுத் தாக்கல்

(யாழ் அலுவலக நிருபர்)

ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் ஆரம்ப நாளான நேற்று யாழ் செயலகத்தில் முதலாவது வேட்புமனுவை ஜனநாயக இடதுசாரி முன்னணி தாக்கல் செய்துள்ளது.

ஜனநாயக இடதுசாரி முன்னணிவேட்பாளர் பட்டியலில் முதன்மை வேட்பாளராகக் காசிப்பிள்ளை செந்தில்வேல் தலைமையில் இரண்டு பெண்கள், இரண்டு பத்திரிகையாளர்கள் உட்பட 12பேர் போட்

(6 ஆம் பக்கம் பார்க்க

## வன்னி மாவட்டத்தில் நேற்று சுயேட்சைக்குழு வேட்புமனுத்தாக்கல்

(வவுனியா அலுவலக நிருபர்)

சுயேட்சைக்குழுஒன்றுவன்னி மாவட்ட பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர் மனு பட்டியலை நேற்று மாலை 3.50

வருமாறு: அன்ரனி இமானுவேல் சில்வா, எஸ்.பி.இலெம்பேட். ஆதம் றகுமத்துல்லா, சத்திவேல சிவகுமார், முருகேசு சாந்தகுமார், செப

## ஏழு மாவட்டங்களில்நேற்று வேட்புமனுத்தாக்கல்

(கொழும்பு)

ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டி இடுவதற்காக நாட்டின் ஏழு தேர்தல தெரிவு அத்தாட்சி செயலகங்களில் நேற்று தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கண்டி, யாழ்ப்பாணம், பொலநறுவை, மொனராகல. இரத்தினபுரி, மாத்தறை, திகாமடுல ஆகிய மாவட்டங்களிலேயே வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ளார். (வ-7)

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போட்டி இடுவது உறுதி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது உறுதி அதில் எந்த மாற்றமும் இலலை. இவ்வாறு அக் கட்சியின் செயலாளர் த. தேவகுல நாயகம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: எமது கட்சி யாழ். மாவட்டத்தில் போட்டியிடவில்லை என சிலர் விசமத்தனமான பிரச்சாரங்களைப் பரப்பி வருகின்றனர். இதில் எவ்வித உண்மையுமில்லை என மறுத்ததுடன், தயாரிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலுடன் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல் முருகு தங்கராஜா இன்று யாழ். வரவுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார். (வ-3)

## தேர்தல் வன்முறையில் மூவர் கொலை

(கொழும்பு)

10 ஆவது பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் இடம் பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் இதுவரை மூவர் கொல்லப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கொலைச் சம்பவ

[6 ஆம் பக்கம் பார்க்க].

## 10 கட்சிகள் 2 சுயேட்சைக்குழு போட்டி

வன்னி மாவட்டத்தில் 10 அரசியல் கட்சிகளும் 2 சுயேட்

வேட்பு மனுக்களைஏற்றுக்

(வவுனியா அலுவலக நிருபர்)
சுயேட்சைக்குழு ஒன்று வன்னி மாவட்ட பொதுத்தேர்தலுக்கான வேட்பாளர் மனு பட்டியலை நேற்று மாலை 3.50 மணியளவில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்துள்ளது என்று வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கே. கணேஸ் தெரிவித்தார்

கந்தையா ஞானதாஸ் தலைமையிலான சுயேட்சைக் குழுவே இந்த வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளது. இவர்கள் ஈ. பி. ஆர். எல். எவ். பெருமாள் அணியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்பாளர் விபரங்கள் வருமாறு: அன்ரனி இமானுவேல் சில்வா, எஸ்.பி.இலெம்பேட், ஆதம் றகுமத்துல்லா, சக்திவேல் சிவகுமார், முருகேசு சாந்தகுமார், செபமாலை திசைவீரசிங்கம், செபதேயு கிலொடியஸ், இராமையா முருகேஸ்வரன். பட்டியலில் இடம் பெற்ற முதல் இரு வேட்பாளர்களுமே வேட்பு மனுவை தாக்கல் செய்ய மாவட்டச் செயலகத்திற்கு வந்திருந்தனர்.

வன்னி மாவட்ட பொதுத் தேர்தலுக்கான முதலாவது வேட்பாளர் மனுவை இவர்கள் தாக்கல் செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

யுத்தத்தினால் அப்பாவி பௌத்த சிங்கள இளைஞர்களே பெருமளவு பலியாகி வருகின்றனர். இதனை அடிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# 10 கட்சிகள் 2 சுயேட்சைக்குழு போட்டி

வன்னி மாவட்டத்தில் 10 அரசியல் கட்சிகளும் 2 சுயேட்சைக் குழுக்களும் இம்முறை தேர்தலில போட்டியிட இருக்கின்றன. இதனையொட்டி வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் வவுனியா மாவட்டச் செயலக பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்

(6ஆம்பக்கம் பார்க்க)

# பயணிகள் கப்பல் இன்று

[யாழ்ப்பாணம்]

'சிற்றி ஒவ்றிங்கோ' பயணிகள் கப்பல் 320 பயணிகளுடன் இன்று பருத்தித்துறை வந்தடையுமெனவும், மீண்டும் பயணிகளை ஏற்றிக்கொண்டு இன்றே திருமலைக்குப் புறப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ந]

# பலாலிக்கு திடீர் விஜயம்

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனறல் அனுருத்தரத்வத்த நேற்று பலாலி இராணுவத்தளத்துக்கு விஜயம் செய்தார். அங்கு குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவைச் சந்தித்து குடாநாட்டின் பாதுகாப்பு நிலைபற்றி கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தின் தேர்தல் நிலவரம் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ - 2)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருமலை மாவட்ட வேட்பாளர்கள்

(திருமலை)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

முதன்மை வேட்பாளராக சட்டத்தரணி காசிநாதர் சிவபாலனும், அடுத்தபடியாக சைவப்புலவர் ஆர். பரசுராமனும் இடம்பெற்றுள்ளனர்.

இவ் வேட்பாளர் தெரிவிற்கான கூட்டத்திற்கு திருமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளருமான இரா. சம்பந்தன் தலைமைதாங்கினார்.

இக் கூட்டத்தில் முதன்மை வேட்பாளர் தெரிவில் கிளை உறுப்பினர்களுக்கிடையே கருத்து முரண்பாடு நிலவியதாகவும் கூட்டணி வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (வ)

# கூட்டணி வேட்பாளர் வீட்டில் குண்டு வெடிப்பு, பாரிய சேதமில்லை

(வவுனியா)

பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிடவுள்ள வன்னித் தொகுதி வேட்பாளர் சதாசிவம் குலதேவராசாவின் வவுனியா யாழ்ப்பாண வீதியில் உள்ள வீட்டிற்கருகில் நேற்று முன்தினம் இரவு குண்டொன்று வெடித்துள்ளது. எனினும் இக் குண்டு வெடிப்பினால் பாரிய சேதம் எதுவுமே ஏற்படவில்லை எனவும் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை தமது வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட ஆரம்பித்துள்ளதாக கூட்டணிக்கிளையின் செயலாளர் புனிதசிங்கமூர்த்தி வவுனியா இராணுவ அதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

வவுனியா யாழ்-வீதியில் இராணுவ காவல் அரண் உள்ளது. அதற்கு அருகாமையிலேயே மேற்படி இல்லம் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# வேட்பாளர் விலகினார்

மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு வேட்பாளர் பட்டியலில் இருந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நாவலடிலேன்திருநெல்வேலி என்ற முகவரியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியும் அதனுள் அமைந்த வீடும் விற்பனைக்குண்டு: தொடர்புகளிற்கு ச:குணேந்திரன் 400, கோவில் வீதி நல்லூர் வடக்கு. [வி-762]

**தவறி விட்டது**

பத்தி நாதர் - மேரிலூட்ஸ் என்பவருடைய தே.அ.அ இல:(755942979V)வி·அ.அ, என்பன ஆனைக்கோட்டைக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லிங்கன் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (1668)


## ஓடுகளைத் திருடிய கள்வர் பொலிஸில்

(சண்டுக்குளி)

பட்டப் பகலில் ஓடுகளை திருடிய நான்கு கள்வர்கள் அப் பகுதியில் காவல் கடமையில்ஈடுபட்டிருந்த பொலிசாரிடம்வகையாக மாட்டிக் கொண்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

சுண்டுக்குளியில் உள்ள காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் உள்ள இரண்டு வீடுகளிலேயே இவ்வாறு நூற்றிற்கு மேற்பட்ட ஓடுகள் திருடப்பட்டனவாம்.

இச்சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப் பட்டதுடன் சம்பந்தப்பட்டோர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(க)

மட்டு. மாவட்ட

# முன்னாள் பா.உ. துரைராஜா அரசியலிலிருந்து ஒதுங்கினார்

### கட்சி பேதம்காரணமல்ல என்கிறது கூட்டணி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே. துரைராஜா அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்களை தெரிவு செய்யும் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது இவ் அறிவிப்பினை அவர் வெளியிட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கத்தின் வீட்டில் நடைபெற்றமேற்படி கூட்டத்தில் அரசியலில் இருந்து ஒதுங்குவதுடன் பொதுத்தேர்தலில் தாம் பங்கு கொள்வதில்லை எனும் தனது தீர்மானத்தினை வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா உட்பட மட்டக்களப்பு கல்குடாபட்டிருப்புத் தொகுதி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே. துரைராஜவின் இவ் அறிவிப்பு புதியவர்களுக்கு தமது கட்சியில் இடம்கொடுக்க வேண்டும் எனும் நல்நிலைப்பாட்டின் வெளிப்பாடெனவும் அவருக்கும் கட்சிக்கும் இடையே எந்தவொரு கருத்து பேதமும் கிடையாதெனவும் யாழ்ப்பாண தமிழர் விடுதலைக்கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

## கணவன் தாக்கியதில் மனைவி மரணம்

(வவுனியா)

செட்டிக்குளம் பகுதியில் கணவன் தாக்கியதில் மனைவி மரணமான சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறின் போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது:

பாவற்குளம் இரண்டாம் யுனிற்றைச் சேர்ந்த படோப்தீன் மொனோபா (வயது 22) என்பவரே மரணமானவராவார்: (ந.7)

## ஆரம்பக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் மணிவிழா அமைப்பின் ஆரம்பக் கூட்டம் இம் மாதம் 23 ஆம் திகதி புலவர் வளவு திருநெல்வேலியில் நடைபெற்றது. சமூக- சமய ரீதியிலும், பல்கலைக்கழகமட்டத்திலும் பெரும் தொண்டாற்றிய பேராசிரியர் அவர்களுக்கான மணி விழா நிர்வாகிகள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக தி. கமலநாதன் (பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) செயலாளராக மதுர கவி காரை எம்.பி. அருளானந்தன், பொருளாளராக திருமதி. ஞா.கணேசநாதன், பத்திராதிபர் பா.தனபாலன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

விழாவின்நோக்கம், மற்றும் ஏற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. விழா அன்று மலர் ஒன்றும் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டது இம் மலர் மிகவும் காத்திரமான அம்சங்களுடன் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் வெளியிடப்பட

## உயர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரியர் கல்வியில் மூன்றாண்டு காலசேவை முன் உயர் தொழில் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியில் இயங்கும் இராமநாதன் கல்லூரி அலுவலகத்தில்பார்வையிடலாம். விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 22 ஆம் திகதி ஆகும். ஆனாலும்காலம் தாழ்த்தாமல் தற்போதைய நாட்டுச் சூழலை அனுசரித்து விண்ணப்பங்களை விரைவாக அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரிபீடாதிபதி தி. கமலநாதன் கேட்டுள்ளார்.

விண்ணப்பங்களை அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி பீடாதிபதியிடம் சேர்ப்பித்தால் நேரடியாகஅவைபரீட்சைத்திணைக்களத்திடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பிப்பவர்கள் 1998 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர்நடைபெற்றக, பொ.த: உயர்தரப் பரீட்சையில் சித்திஎய்தியிருக்க வேண்டுமெனவும் 01.01.2000 அன்று 24 வயதுக்குள் இருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்:

பாட நெறிகளுக்காக பெற வேண்டிய மொத்தப்புள்ளிகள்: ஆங்கிலபாடநெறிக்கு க.பொ.த(உ.த) ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்து ஒரே அமர்வில் 180 புள்ளிகளுடன் க.பொ.த (சா.த) ஆங்கிலத்தில் விசேட சித்தி இருக்க வேண்டும் அல்லது க.பொ:த (உ:த) 220 புள்ளிகளுடனும் க.பொ.த (சா.த) ஆங்கிலம் /ஆங்கில இலக்கியத்தில் அதிவிசேட சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

ஆரம்பக்கல்வி, சமூகக்கல்வி நூலக விஞ்ஞானமும், தொடர்பாடலும், தமிழ், விவசாயம், மனைப்பொருளியல் ஆகிய பாட நெறிகளுக்கு 220 க்குக் குறையாத புள்ளிகளும் விஞ்ஞானம்-200, கணிதம்.160, சித்திரம், சங்கீதம், நடனம், தொழில்நுட்பம்-180 புள்ளிகளுக்குக் குறையாமலும் விண்ணப்பதாரர்கள் தகமைகளைக் கொண்டிருக்க வேண்டும் எனவும்பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (க)

## தீவுப் பகுதியில் விசேட அடையாள அட்டை வழங்கல்

(மண்டைதீவு)

தீவுப் பகுதியில் வசிப்பவர்களிற்கு கடற்படையினரால் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

தேசிய அடையாள அட்டை இராணுவத்தினரால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டை ஆகியவற்றுடன் தீவுப்பகுதி மக்கள் இப்போது கடற்படையினரால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டையையும் பெறுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## யாழ். போதனா வைத்திய சாலையின் கண், காது, தொண்டை பகுதி மீண்டும் இயங்குகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்திய சாலையின் காது, மூக்கு, தொண்டை ஆகிய பகுதிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பிரிவு மீண்டும் இயங்குவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பகுதிக்குப்பொறுப்பாக கடமையாற்றிய வைத்தியர் சிவசுப்பிரமணியம் கொழும்பிற்கு சென்றுள்ளதையடுத்து மேற்படிபிரிவு கடந்த இரு வாரகாலமாக செயற்படாமல் இருந்து வந்தது.

பதில் கடமையாற்றியவைத்தியர் தற்காலிகமாக இப் பொறுப்பினை ஏற்றுள்ளதையடுத்தே இப்பகுதி மீண்டும் செயற்பட தொடங்கியுள்ளது (க-12)

## தேர்தலை முன்னிட்டு மட்டு. மாவட்ட செயலகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

(மட்டக்களப்பு)

ஒக்டோபர் 10 ஆம் திகதி நடைபெற உள்ள 11 வது பொதுத்தேர்தலிற்கான நியமனப் பத்திரங்களை ஏற்கும் [illegible] ... புப் பணியில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. [சு-60]


★ மறைந்தார் மாண்பு ★

மண்பலாய் பணிபுரிந்த மாமனிதன்


அடையாள அட்டை

## மண்புலரப் பணிபுரிந்த மாமனிதன் அமரர் மாணிக்கவாசகர்



மனித நேயம், கடமை உணர்வு, நிர்வாகச் செழுமை ஆழிபோல் விரிந்து பரந்த இறைநுகர் பாங்கும், பிறர் தமர்பாராப் பெருந்தன்மையும், ஊழியர் மாட்டு உள்ளன்பும், உயர் நிர்வாகப் பேராண்மையும், இந்த மண் கண்டு களிப்புற்ற செம்மை நெறிகளாகும்.

பிறவாழி அந்தணன் தாள் மறவாத பெற்றியராய் தம் கருமங்களை ஆற்றி ஆறுதல் பெற்றவர். போர்ப் பேரிகை முழங்கும் போதெல்லாம் இறைவன் இட்டபணி எனத் தன்பணி தவறாத் தக்கேனாய் வாழ்ந்து சிறந்தவர் வெள்ளையுள்ளங் கொண்ட மாணிக்கர் மெய்யும் வெள்ளை அகமும் வெள்ளையாய் அகிலத்தை அரவணைத்த தீரன். தன் நெஞ்சறிவது பொய்யற்க என்றதத்துவப் பேராளனாய் வையகம் பயனுற வாழ்ந்த மனிதம் நிரம்பிய மனிதன் உடுக்கையிழந்தவன்கைபோல பிறர் இடுக்கண் களைந்த பேராளன்.

இதயசுத்தியுடன் தாம் சம்பாதித்த செல்வாக்கின் ஒளிவீச்சிலே உவகை கண்ட உத்தமர் பகைமை நிறைந்த கைங்காரியங்கள் பக்குவம் உற்ற உள்ளம் என்றும் எம்மிடை நின்று நிலவென ஒளிரும் குலதெய்வங்களான இணுவைச் சிவகாம சுந்தரி மருதடி விநாயகர் இருவரும் ஆத்ம ஈடேற்றத்துக்கு வழி சமைக்க வேண்டுமென ஏங்கி இரங்கி பிரார்த்திக்கும்.

**இரா- சுந்தரலிங்கம்**
முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளரும் இன்றைய வட- கிழக்குமாகாணப்பரீட்சைஆணையாளரும்

திரமான அம்சங்களுடன் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் வெளியிடப்பட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டது.

மேலும் இவ் விழா அமைப் பொழுங்குகள் தொடர்பாக ஆலோசனைகளைத் தெரிவிப்பவர்கள்;

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் மணிவிழா அமைப்பு, 250, பலாலி வீதி, புலவர் வளவு திருநெல்வேலி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

பொதுத்தேர்தலிற்கான நியமனப் பத்திரங்களை ஏற்கும் முதல்தினமான நேற்று 28 ஆம் திகதி மட்டக்களப்பு நகரில் மாவட்ட செயலகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

மாவட்ட செயலக ஊழியர்கள் அனைவரும் சோதனை செய்யப்பட்ட பின்னரே அனுமதிக்கப்பட்டனர். மேலதிகமான படையினர் எங்கும் காணப்பட்டனர். மாவட்ட செயலக வளவினுள் ஆண், பெண் படையினர் பாதுகாப்

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இத்தியடிப் பிள்ளையார் கோவில் வீதி, சங்கத்தானை என்ற முகவரியைச் சேர்ந்த சிவலோகநாதன் சுதர்சினி என்பவரின்தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி, அலுவலகத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் அலுவலக நேரத்தில்பெற்றுக் கொள்ளவும். (சு)

### புல் பூண்டுகள் மண்டிய நிலையில்

# தந்தை செல்வா நினைவாலயம் யாழ். மாநகரசபை அசமந்தம்

## பொதுமக்கள் விசனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண நகர மத்தியில் அமைக்கப்பட்டுள்ள தந்தை செல்வா நினைவாலயம் புல் பூண்டுசெடிவகைகள் நிறைந்து கவனிப்பாரற்று காணப்படுகிறது.

இப் பகுதி முக்கிய தினங்களில் மட்டுமே துப்பரவு செய்யப்பட்டு நிகழ்ச்சிகளை நடாத்துகின்ற மரபே இப்போது பேணப் பட்டு வருவதாக யாழ்ப்பாணப் பொது மக்கள் கவலையை வெளிப் படுத்தியுள்ளனர்.

நினைவாலயச் சுற்றாடலை அழகுபடுத்தி கவர்ச்சியும் புனிதமு மிக்கதாக வைத்திருக்க வேண்டும் என்ம் சம்பந்தப்பட்டவர்களால் கூறப் பட்டு வந்துள்ள போதிலும் அது விடயத்தில் எவ் வித மான முன்னேற்றமும் இது வரை ஏற்படவில்லை, என்பதையும் பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நினைவாலயத்தினைப் பராமரிக்கும் பணியை யாழ். மாநகரசபை பொறுப் பேற்றிருந்தும் கூட, அங்கு எவ்விதமான முன்னேற்றகரமான வேலைகளும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

[க-77]

யாழ்ப்பாணம்



## இன்று ஒரு தகவல்

# வறுமை வாழ்வின் வளத்திற்கு தடையல்ல முயற்சியால் உயர்ந்த எழுத்தாளர் அப்டன்

வறுமை ஒரு போதும்வளத்திற்குத் தடையாக இருக்க முடியாது என்பது வரலாறு காட்டும் பாடம். இதற்கு சான்றாக இருப்பவர் தான் அப்டன் சிங்களர் என்ற பிரபல கதாசிரியர். இவரைப் பேட்டி காண ஒரு நிருபர் வந்தார்.

வந்தவர் பாராட்டும் வகையில் ''நீங்கள் ஆங்கில இலக்கியத்திற்கு அபாரமானசேவை செய்திருக்கிறீர்கள்'' என்றார். உடனே அப்டன் சிங்களர். ''அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. என்னுடைய வறுமையைப்போக்கிகொள்ளவே நான் இலக்கிய சேவை செய்கின்றேன்'' என்றார்.

அப்டன் சிங்களர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தந்தையார் மதுக்கடையில் வேலை செய்தபடியினால் பெரியகுடிகாரர் ஆகிவிட்டார். இதனால் ஏற்கனவேவறுமையில்கஷ்டப்படும் குடும்பம் மேலும் சிரமப்பட்டது. அதனால் இவர் பள்ளிக்குச் சென்று படிக்க முடியவில்லை.

வீட்டில் இருந்த தாயாரிடமே எழுதப் படிக்கக்கற்றுக் கொண்டார், ஆரம்பப்பாடங்களைக்கற்றதும் தன்கைக்கு கிடைக்கும் புத்தகங்களைப் படித்தார். மேதையின் வரலாறுகளை விரும்பினார்.

பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்றஆர்வம் ஏற்பட்டது; படிப்பில் ஓரளவு தேர்ச்சி பெற்று இருந்ததால், உயர் கல்வி வகுப்பிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

ஆனால் பள்ளிக்கு சம்பளம் கட்ட வேண்டுமே. என்ன செய்வது? இதற்காக அப்டன் சிங்களர் மனம்தரபவில்லை; சிரிப்புத் துணுக்குகள் எழுதி, பலபத்திரிகைகளுக்கு அனுப்பி வந்தார்.

அவர் அனுப்பும் பத்துத் துணுக்குகளில் நிச்சயம் இரண்டு துணுக்குகளாவது பத்திரிகையில் பிரசுரமாகும். அதற்காக அவர்கள் அளிக்கும் சன்மானத்தைக் கொண்டே அவர் பள்ளிக்குச் சம்பளத்தைக் கட்டிவிட்டுதம்முடைய செலவையும் பூர்த்தி செய்து கொண்டு வந்தார்.

உயர்தரப் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் சென்றதும் சிங்களர் நாவல்கள் எழுதத் தொடங்கினார். பகல்வேளையில் கல்லூரிப்படிப்பு, இரவில் எழுதும் வேலை, இப்படியாக அவர் தம்முடைய படிப்பிற்கும் குடும்பத்தைக்காப்பாற்றுவதற்குமாக முதலிலிருந்தே இலக்கியத்தின் உதவியை நாடினார்.

சிங்களர் பெரிய கதாசிரியராக ஆன பிறகு தம்மைப் போல கஷ்டப்படும் எழுத்தாளர்களை மறந்து விடவில்லை அவர் சம்பாதித்தபணத்தைக் கொண்டே ஒரு காலனி ஏற்படுத்தி, அங்கே பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பலரை வந்து குடியேறி இருக்கச் செய்தார்,

வறுமையில் கஷ்டப்பட்ட போது சிங்களர் சாதாரண இடத்தில் வசித்து வந்தார். பணக்காரரான பிறகும் கூட அவர் அம்மாதிரியான சிறு இடத்திலேயே வாழ்ந்தார். பணம் வந்ததும் பகட்டான வாழ்வைத் தேடிக் கொள்ளவில்லை. வறுமையின் தாக்கத்தை நன்கு உணர்ந்துஇருந்தபடியினால் சக எழுத்தாளர்களுக்குஉதவிசெய்வதில் அதிக நாட்டம் கொண்டிருநதார்.

வாழ்க்கையில் ஆடம்பரச் செலவு செய்வதை அடியோடு வெறுத்தார். அந்தச் செலவு செய்வதை மிச்சப்படுத்தினால், அதை வறுமையில் வாடும் எழுத்தாளர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று செயல்படுத்திக் காட்டினார்,

வறுமையில் பிறந்து வளர்ந்து இருந்தாலும் அதனையே குறையாக நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்காமல் தன்னுடையஇடைவிடாத உழைப்பின் மூலம் உயர்வு பெற முடியும் என்பதனை இவருடைய செயலாற்றல் வெளிப்படுத்துகிறது.

நாமும் இவரைப் பின் பற்றினால், நம் முடைய குடிப்பிறபபையும் சூழ்நிலையும் குறை சொல்லாமல், நம்மால் இயன்றவரை உழைத்துஉயர்வுபெற முடியும்; குறை கூறிக் கொண்டே இருந்தால் என்றும் முன்னேற்றம் காண முடியாது. குறையை நிறைவாக ஆக்குவதில் தான் வெற்றியின் வெளிச்சம் இருக்கிறது.

மெர்வின்

## நல்லையில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவ காலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை ''அன்பு நெறி'' என்னும் பொருளில் செஞ்சொல்வாரிதி எம் எஸ். ஸ்ரீதயாளன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்துமூன்று நாயன்மார் மடத்தில் பி. ப. 2.00 மணிக்கு நடைபெறவுளளது. (செ)

## வருடாந்த உற்சவம்

(மந்துவில்)

துன்னாலைதெற்கு கிளான் பிரத்தியங்கிலி காளி தேவி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. (செ-39)

## 2000 ரூபா கொடுப்பனவு

(சங்கானை)

அனர்த்தங்களின் காரணமாக பளை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது வலிகாமம் மேற்குப் பிரதே செயலர் பிரிவில் வசிக்கும் 999 குடும்பங்களுக்கு 2000/- கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேற்படி கொடுப்பனவினை வழங்குவதற்கான நடவடிக்கையில் வலி - மேற்குப்பிரதேச செயலகமும், மக்கள் வங்கி யாழ். கிளையும் இணைந்து ஈடுபடவுள்ளது. கொடுப்பனவு வலி - மேற்குப் பிரதேச செயலகத்தில் நேற்று திங்கள் தொடக்கம் புதன். வெள்ளி ஆகிய 3 நாட்கள் பிற்பகல் 1. 30 மணிக்கு இடம் பெறும். (க-24)

## மீனவர் பிரச்சினை தீர்த்து வைப்பு

(வண்ணார்பண்ணை)

காரை நகர் வடக்குகடலில் தொழில் செய்யும் களங்கண்டி மீன்பிடி தொழிலளர்களிற்கும், சிறுவலைத் தொழிலளர்களிற்கும் இடையிலான பிணக்கு அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம்களங்கண்டி தொழிலாளர்கள் கரையிலிருந்து 10 முழத்திற்கு உட்பட்ட பகுதியில் தொழிலைச் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது ஏனைய பிர

## நல்லூரான் திருவடிக்கு - 25

(தீர்த்தோற்சவம்)



## நல்லூர் மான்மியம்

தேரடி மண்ணில் அந்த திருவுடை செல்லப்பனாரும்
ஆடியும் பாடி நின்று அற்புதக் கூத்துமாடி
கூடியே மக்களெல்லாம் குதூகலித் துவகை பூத்து
நாடியே வணங்கி நிற்க நல்லருள் புரிந்த நல்லூர்!

சிந்துக்கள் பலவும் வல்ல செல்லப்பர் என்னும் ஆசான்
நித்தமும் வீற்றிருந்து நிகரிலா உனரகள் செய்ய
வித்தகன் போதனையை விருப்புடன் ஏற்று நின்ற
உத்தமன் யோகப் என்றும் உலாவிய வீதியன்றோ!

தேரடி மண்ணில் நின்று திருவுடை ஞானியாரும்
ஆரடா என்று பேசி அற்புதக் கூத்து பாடி
ஓடடா என்று உரத்த அக்குரலில் பேசி
நாடக மாடியதும் நல்லூரான் மண்ணிலன்றோ!

ஊரது பற்பல உள்ள இவ் யாழ்ப்பாணத்தில்
ஊரலாம் நல்லூர் என்று உரைத்திட முடியுமோசொல்?
சீரோங்கு ஞானிகள் சிறப்புற வீற்றிருந்த மண்ணாம்
பாரோங்கு புகழ் படைத்த பண்டையூர் நல்லூரன்றோ!

நல்லையம்பதியில் நாளும் நயப்புடன் வீற்றிருந்து
வெல்லும் செவ்வேலைத்தாங்கி விநோதங்கள் பலபுரியும்
அல்லைகள் போக்கு மந்த ஆறுமுக வேலன் தன்னை
நல்லையம்பதியிற் கண்டவர் நற்கதியடைவார் தானே!

இல்லையென்றழுதவர்க்கு ஈந்தருள் புரியும் செம்மல்
வல்வினை தன்னால் நாளும் வருந்துவோர்க்
கருளும் தெய்வம்
சொல்லொண்ணா வறுமை மிஞ்சி சோர்வுற்று
கதறுவோர்க்கும்
நல்லையம்பதியான் நாளும் நல்லருள் வழங்கி நிற்பான்!

ஆக்கம்; மு. திருநாவுக்கரசு
முன்னை நாள் நீதிபதி

## நல்லூர்க் கந்தன் பாமாலை

தீர்த்த விழாவன்று திருக்குளத்தில் நல்லூரில்
ஆர்ப்பரித்து மூழ்கும் அடியார்க்கு - தீர்த்தத்தாற்
பாவங்கள் தீரும் பணிந்தாடிக் கொண்டாட
ஆவலுந் தீரும் அவர்க்கு.

சி. இராசரத்தினம் (இறைமணி)

## வரம் தர வேண்டும்

சாதி பேதங்கள் ஒழிய வேண்டும்
சமதர்ம சமுதாயம் தோன்ற வேண்டும்
நீதி நேர்மை பிறக்க வேண்டும்
நிம்மதியை கெடுக்கும் போர் நீங்க வேண்டும்
சீதனக் கொடுமை போக வேண்டும்

# இளைய தலைமுறையினரிடையே
# எழுத்தாற்றலை வளர்க்க வேண்டியது

# இளைய தலைமுறையினரிடையே எழுத்தாற்றலை வளர்க்க வேண்டியது காலத்தின் அவசிய தேவையே

**- தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர்**

(யாழ்ப்பாணம்)

இளைய தலைமுறையினரிடையே அருகிப்போகும் எழுத்தாற்றலை ஆகம் பெறச் செய்வது இன்றைய காலத்தில் அவசியமானதாகும்.

மேற்கண்டவாறு தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வை. செல்வராசா தெரிவித்துள்ளார்.

நெல்லியடி - கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத்தில் இடம்பெற்ற ந. பார்த்திபனின் (முதுகலைமாணி, ஆசிரிய ஆலோசகர்) 'மனத்தூறல்' என்னும் சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழாவின் போதே மேற்கண்டவாறு உரையாற்றினார்.

இவ் வைபவத்தின் போது அவர் மேலும் பேசுகையில் ஒரு நூலிற்கான கருப்பொருளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது, அதனை எவ்வாறு நூல் வடிவிற்கு கொண்டு வருவது என்பது பற்றி அறிவதற்கு மூத்த எழுத்தாளர்களின் அறிவுரைகள் கருத்துக்கள் உதவுகின்றன என்றார். இன்றைய இளம் தலைமுறையினர் இந் நிகழ்வுகளில் பங்குகொள்வது மிகமிக அருகி வருகின்றது. இதற்குக் காரணம் சினிமா மோகமே என அவர் மேலும் கூறினார்.

மேற்படி விழாவில் நூலின் அட்டைப்பட ஓவியர் ரமணி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (சு-41)

## கொடுப்பனவு இல்லை

(மல்லாகம்)

தென்மராட்சி, இருபாலை மற்றும் நாவற்குழி போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சுன்னாகம், இணுவில், உடுவில் போன்ற பகுதிகளில் தங்கியிருப்பவர்களில் பெரும்பாலானவர்களிற்கு இதுவரையும் 2000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (சு-14)

பட்ட பகுதியில் தொழிலைச் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது ஏனைய பிரதேசங்களில் சிறுகடற்றொழிலாளர்கள் தொழிலை செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (சு-109)

## அடையாள அட்டை வழங்கல்

(அரியாலை)

உடுவில் வடக்கு J/185 இராம உத்தியோகத்தர் பிரிவு ஊடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வந்துள்ளதாக இராம உத்தியோகத்தர் செ. றோ. ஜெசுபாலன் தெரிவித்துள்ளார்.

இவ் அட்டைகளை உரியவர்கள் அலுவலக நேரத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத்தெரிவிக்கப்படுகின்றது. (சு-106)

## உரிமத் தகடு வழங்கல்

(மல்லாகம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரிக்கு அருகாமையிலுள்ள சனசமூக நிலையத்தில் துவிச்சக்கர வண்டிகளிற்கான உரிமைத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றது. (சு-14)

நிம்மதியை கெடுக்கும் போர் நீங்க வேண்டும்
சீதனக் கொடுமை போக வேண்டும்
சிரம் மீது கரங் கூப்பி தொழுகின்றேன்
வரம் இவை நீ தர வேண்டும்
வரலாற்று புகழ் பூத்த நல்லைக் கந்தா

நீர்வை இரதி

## தீர்த்தமாடும் நல்லைக் கந்தன்

பைந்தமிழ் வாழ்ந்திடும் முருகன் - நல்லையில்
பன்னீர் மழையில் குளிக்கின்றான்
செந்தமிழ் காத்திடும் முருகன் - நல்லையில்
தேன் மழையில் குளிக்கின்றான்.

கண்ணீரில் மிதந்திடும் தமிழன் - இன்றைய
கண்ணீரைக் கலைத்திட தீர்த்தம் ஆடுகின்றான்
செந்நீரில் புதைந்திடும் தமிழன் - தனது
தேசத்தில் மகிழ்ந்திட தீர்த்தம் ஆடுகின்றான்.

நல்லை அமிழ்தன்

## துயரிற்கு விடை சொல்வாய் குருபரனே

என் வீட்டில் இருந்து தினம் உன் கோவில் வரவேண்டும்
என் நாடு என்று சொல்லி தலைநிமிர்ந்து வரவேண்டும்
விண்ணவரின் சேனைக்கு அதிபதியாய் நின்றவனே
எம்மவரின் துயருக்கு விடை சொல்வாய் குருபரனே.

- சித்திரவரதன்.

# பங்களாதேஷில் பாரிய தீவிபத்து

# 10 பெண்கள் உட்பட 12 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் வடபகுதியில் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கிய 10பெண்கள் உட்பட 12பேர் இறந்தனர்.

அனைவரும் இரவுநேரத் தொழிலாளர்களென்றும் மூச்சுத்தினறலினால் அவர்கள் இறந்திருக்கலாமென்றும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த மற்றத்தொழிலாளர்கள் தொழிற்சாலையின் சுவரை உடைத்துக் கொண்டு வெளியேறி விட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலையில் ஏற்பட்ட இத்தீ அணைக்கப்பட்டுவிட்டதாகவும் அவசரகாலகதவு அத்தொழிற்சாலைக்கு இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பூட்டப்பட்டிருந்தகதவுக்கு அண்மையிலேயே தீமூண்டதால் வெளியேற முடியாது போனதென்றும் சொல்லப்படுகிறது. (து)

## பணயக்கைகதிகள் ஐவர் விடுதலை

(மணிலா)

தெற்கு பிலிப்பைன்ஸ் கிளர்ச்சியாளர்களால் கடந்த 4 மாதங்களாக பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 12 வெளிநாட்டவர்களில் 5 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் பிரான்ஸ் நாட்டவர், மற்றையோர் லெபனான், தென்னாபிரிக்க நாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக தரிசனம்

## ஊடகவியலாளர் விடுதலை

(லண்டன்)

லைபீரிய அரசு, கைது செய்து தடுத்து வைத்திருந்த 4 ஊடகவியலாளர்களை விடுதலை செய்துள்ளது.

இவர்கள் பிரிட்டன், சியராலியோன் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## கோதாவரி உடைப்பெடுக்கலாம் மக்கள் மத்தியில் அச்சம்

(புதுடில்லி)

இந்தியாவின் ஆந்திரப்பிரதேசத்தில் அண்மையில் பெய்த கடும்மழை காரணமாக கோதாவரி நதி உடைப்பெடுக்கும் ஆபத்து நிலையை எட்டியுள்ளது.

இதனால் ஏற்பட்ட அச்ச நிலை காரணமாக, மேற்படி நதியை அண்டிய கிராம மக்களை மேட்டுநிலப்பிரதேசத்திற்கு இடமாற்றும் நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

மக்களை இடமாற்றும் நடவடிக்கையில் இராணுவ. பொலிஸ் உலங்குவானூர்திகள் ஈடுபட்டுள்ளன.

இதே சமயம், கடந்த 50 வருடங்களில் ஏற்படாத இப்பெருமழை காரணமாக ஆந்திராவில் 143 பொதுமக்கள் இறந்துள்ளமை தெரிந்ததே. (உ)

## அரச நிறுவனங்கள் தம் பங்குகளை பொதுமக்களுக்கும் விற்கலாம்

(புதுடில்லி)

இந்தியாவில் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பதற்கு ஆளும் பாரதிய ஜனதாக் கட்சி அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த பாரதிய ஜனதாக்கட்சியின் மகாநாட்டில அரசுதனியார் மயக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறதென்றும் இதன் அடிப்படையில் நட்டமடையும், இலாபம் குறைவாகத்தரும் அரச ஸ்தாபனங்களின் பங்குகளை பொதுமக்களுக்குவிற்பது நல்லதென்றும் வெளிநாட்டவர்களுக்கும் பங்குகளை விற்கலாமென்றும் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

புதிய தலைவரான பங்கார் லக்ஷ்மன் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் பிரதமமந்திரி வாஜ்பாய் உட்படப் பலமுக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (து)

## கேரளா மாநிலத்திற்கு யுனெஸ்கோவின் விருது

(புதுடில்லி)

கேரள மாநிலத்துக்கு ஐ நா: சபையின் யுனெஸ்கோவில் அறிவெளி விருது கிடைத்திருக்கிறது.

இந்தியவில் 100 வீதம் எழுத்தறிவுள்ளோர் வசிக்கும் மாநிலங்கள் வரிசையில் கேரளம் 1991 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தது.

யுனெஸ் கோவின் இந்த விருது கிடைப்பதன் முலமாக கேரள மாநிலம் எழுத்தறிவில் 100 வீதம் என்பதை அங்கீகரிந்துள்ளது.

மாநிலத்துக்கான இந்த விருதினை உலக அறிவெளி தினமான செப்டெம்பர் 8 இல் மனித வளத்துறை அமைச்சர் முரளிமனோகர் யோகி வழங்குவார். (து)

# தனியார் விமானத்தில் தீ பரவியது இயந்திரக்கோளாறு காரணம்

## ஹவாய் தீவில் சம்பவம்

(லண்டன்)

ஹவாய் தீவில் தனியார் விமானம் ஒன்று தீவிபத்துக்குள்ளாகி கடலில் வீழ்ந்தது.

இவ்விமானத்தில் பயணம் செய்த 9 பேரில் 8 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் பற்றிய விபரம் எதவும் தெயவராததனால் அவர் இறந்து போயிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் தீப்பிடித்து கொண்டதாகவும் இதனால் கட்டுப்பாடிழந்த நிலையில் கடலில் வீழ்ந்ததாகவும் தெரியவந்துள்ளது.

விமானம் கடலில் வீழ்ந்த போதிலும் பயணிகள் மீட்கப்பட்டமை தெய்வாதீனமான செயல் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## அமெரிக்க கொடியை ஜெருசலேத்தில் ஏற்ற பில்கிளின்டனுக்கு அழைப்பு

(ஜெருசலேம்)

ஜெருசலேம் கிழக்கில் அமெரிக்க கொடியை ஏற்ற வருமாறு அதிபர் பில் கிளின்டனுக்கும் பலஸ்தீன அதிபர் ஜஸிர் அரபாத் அழைப்பு விடுத்துள்ளார்.

எகிப்தின் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஜஸிர் அரபாத் ஜெருசலேம் கிழக்கில் அமெரிக்க தூதரகத்தைத் திறப்பதற்கும் அங்கு அமெரிக்க கொடியை ஏற்றுவதற்கும் வரும்படி ஜஸிர் அரபாத் பில் கிளின்டனுக்கு அழைப்பு விடுத்தார்.

இதே வேளை இஸ்ரேல் பகுதியில் இருக்கும் அமெரிக்க தூதரகத்தை ஜெருசேலம் கிழக்குப் பகுதிக்கு மாற்றுவதாக அமெரிக்கா ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (து)

## செய்திப்பரல்

★ இரண்டு மாதத்துக்குள் ஹிஸ்புல் முஜாகுதீன் இயக்கத்துக்கும் மத்திய அரசுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் தொடக்க இருப்பதாக ஜோர்ஜ்பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

★ ஒலிம்பிக் போட்டிகள் சிட்னியில் தொடங்குவதற்கு மூன்று வாரங்கள் இருக்கின்றன.

★ ஜெயலலிதாவின் அ. இ. அ. தி. மு. க. தேர்தலில் தமிழ்மாநில காங்

## வாஜ்பாயின் உடல் நிலை சீரில்லையாம் கூட்டத்தின் இடையில் நழுவினார்

(புதுடில்லி)

பாரதீஜ ஜனதாக்கட்சியின் முக்கிய கூட்டத்தில் கலந்து கொள்ளவெனச் சென்ற இந்தியப் பிரதமர், உடல்நிலை சீரின்மையால் கூட்டம் முடிவடைவதற்குள் புதுடில்லி திரும்பியிருப்பதாக தெரியவருகிறது.

நாரிப் பிடிப்பு மற்றும்வேறு நோய்களின் தாக்கம் காரணமாகவே பிரதமர் வாஜ்பாய் இவ்வாறு இடையில் சென்றிருப்பதாகதெரியவந்துள்ளது.

ஒரு நாள் ஓய்வுக்குப் பின்னர் உடல் சீராக இருப்பதாகவும், இன்று தனது வழமையான அமைச்சரவைப் பணிகளை மேற் கொள்வார் எனவும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பிரதமர் விரைவில்மேற்கொள்ளவுள்ள அமெரிக்கப் பயணத்தில் ஏதொரு மாற்றமும் இடையாதென புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [உ-க]

## தமிழகத்தில் விரைவில் புதியகட்சி உதயம்

(சென்னை)

முன்னாள் அமைச்சர்கள் சேர்ந்து தமிழகத்தில் புதிய

சந்திரன், சோமசுந்தரம், ராஜாராம் ஆகியோர் உள்ளிட்டவர்கள் புதிய கட்சி

## காத்தக்குடி மீனவர் போராட்டம்

(சென்னை)

முன்னாள் அமைச்சர்கள் சேர்ந்து தமிழகத்தில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க இருக்கிறார்கள்:

மறைந்த அ. தி. மு. க. முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் கொள்கைகளைப்பரப்பவும், சாதி அடிப்படையிலான அரசியலை அகற்றவும் புதிய கட்சியை அமைக்க இருக்கிறார்கள்?

முன்னாள் அமைச்சர்களான பண்டிருப்பு இரமச்சந்திரன், சோமசுந்தரம், ராஜாராம் ஆகியோர் உள்ளிட்டவர்கள் புதிய கட்சி பற்றி நேற்று ஆலோசனை நடத்தினார்களென்றும் அறிவிக்கப்படுகிறது.

செய்தியாளர் மத்தியில் இந்தமூன்றுமுன்னாள் அமைச்சர்கள் குறிப்பிடுகையில் அண்ணாவின் பிறந்த நளான செப்டெம்பர்15 இல் இப்புதிய கட்சிபற்றி அறிவிக்கபடுமென்றும் சொல்லப்படுகின்றது. (து)

அ. தி. மு. க. தேர்தலில் தமிழ்மாநில காங்கிரசுடன் தேர்தல் உடன்பாட்டுக்குவிரும்புகிறது.

★ பங்காரு லக்ஸ்மன் பாரதிய ஜனதாக் கட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

★ ஆந்திரப் பிரதேஷில் வெள்ளத்தால் சுமார் 770கோடி ரூபா சேதம் ஏற்பட்டிருப்பதாக சந்திரபாபுநாயுடு தெரிவித்தார்.

# தூத்துக்குடி மீனவர் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

(புதுடில்லி)

தூத்துக்குடி மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த மீன்பிடி புறக்கணிப்புப் போராட்டம் நேற்றுமுதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தைகளின் போது அவர்களால் முன்வைக்கப்பட்ட 15அம்சக் கோரிக்கைகளுககு சாதகமான பதில் கிடைத்ததையடுத்தே மீனவர் போராட்டம் கைவிடப்பட்டது.

இம்மாதம் 7 ஆம் திகதி தொடக்கம், மேற்படி மீனவர்கள் 15அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து மீன்பிடி புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## தம்மால் கைது செய்யப்பட்ட

# பிரிட்டிஷ் படைகளை விடுவிக்க தீவிரவாதிகள் புதிய நிபந்தனை

## சியராலியோனில் சம்பவம்

(பிறிடவுன்)

சியராலியோன் கிளர்ச்சிப் படைகள், தம்மால் பிடிக்கப்பட்ட 11 பிரிட்டன்படைகளை விடுப்பதற்கு நிபந்தனைகள் சிலவற்றை விதித்துள்ளனர்:

தமக்கு வேண்டிய உணவு மருந்து வகைகள் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அத்துடன் சியராலியோனில் நிலைகொண்டுள்ள ஐ.நா அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்ட தமது முக்கிய தலைவர் ஒருவர் விடுவிக்கப்படவேண்டும் எனும் நிபந்தனைகளை கிளர்ச்சியாளர்கள் விடுத்துள்ளனர்.

மேற்படி நிபந்தனைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை சம்பந்தப்பட்ட கிளர்ச்சியாளர் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

இதேவேளை 25 ஆம் திகதி சியராலியோன் தலைநகர் பிறிடவுனில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை மேற்படி 11 பிரிட்டன் அமைதிப்படையினரை கிளர்ச்சியாளர்கள் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# ஆந்திராவில் தொடரும் போராட்டம் சட்டசபைக்குள் நுளையவும் திட்டம்

(புதுடில்லி)

மின்சார கட்டண உயர்வை எதிர்த்து ஆந்திர பிரதேசத்தில் இடம்பெறும் உண்ணாவிரத போராட்டம் எக்காரணம் கொண்டும் கைவிடப்பட மாட்டாது என எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்:

ஆந்திர பிரதேசில் விதிக்கப்பட்ட மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து தொடர்ந்துவரும் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடமாட்டார்கள்:

மாநிலத்தின் காங்கிரஸ் கட்சியுடம் மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் 10 வது நாளாகத் தொடர்ந்து வரும் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப் போவதில்லையென்று எதிர்கட்சித் தலைவர் டாக்டர் வை: எஸ்; ராஜசேகர் ரெட்டி கூறினார்;

இதேவேளை சட்டசபைகுக் வெளியே கூட்டம் வைப்பதற்கு அனுமதி மறுத்த அரசை கண்டித்த எதிர்க்கட்சியினர் சட்டசபைக்குள் அத்துமீறி பிரவேசிப்பதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை கடந்த 10 நாட்களுக்கு முன்பு சட்டசபை காக்கிரஸ் கம்யுனிஸ்ட் உறுப்பினர்களை சபை நடவடிக்கைகளிலிருந்து இடைநிறுத்தம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது; (து)

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணில் வகைமைஉணர்வார்ப்பெறின்
-குறள்

வலம்புரி

## நியாயமான அரசியல் தீர்வு

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான ஓர் அரசியல் தீர்வுகட்டாயம் வேண்டும் என்று வலியுறுத்துகிறார் தளபதி லயனல் பலகல்ல. துறைக்கு அப்பால் உளந்திறந்து பேசும் நிலை இதுவாகும். நிலைமை அதுவானால்எங்கள்தேசம் எரிந்து சாம்பல் மேடாகாது அரசியல் தீர்வொன்று மலர வேண்டும் என்பது தெளிவு.

தவிச்ச முயல் அடிக்காது, தன்மானம் பேணி, தன்னினம் வாழக்கடமை புரிவது தியாகமும்தேவையுமாகும். கடந்த காலங்களில் வாய்புலம்பியதளபதிகள் போலல்லாது திருவாய் மலர்ந்தருளிய லயனலுக்கு பாராட்டு. இனத்தை அடகு வைக்கலாம், அரச போகத்தை நுகரலாம் என்று எண்ணி மயங்கி நெல்லிக்காய் மூடைபோல பதவி வேட்கையால் பல்திசையும் சிதறிக் கிடக்கும் அரசியல் சித்தாந்திகளை நினைக்கும் போது கவலையாகத் தான் இருக்கிறது. ஒற்றுமையும் ஒரு நோக்கும் எம்மிடை இருந்திருந்தால் நாங்கள் நிற்கும் இடம் வேறு. எம்மிடமிரந்து கேட்கும் அளவுக்கு அல்லலற்று முன்னேறியிருப்போம்.

ஒரு காலத்தில் முதிர்ந்தவன் பல்லுக்கொருஇயக்கமாய் மயங்கிக் கிடந்தது இந்த மண். கைகளிலே தூக்கிய துப்பாக்கி விடுதலை வேட்கை ஒன்றுக்குத் தான். இலக்குத் தவறாத பக்குவ மனம இருந்திருக்குமானால் கருத்து முரண்கள் பேசித்தீர்க்குமளவிற்கு சென்றிருக்கும்.

# மனிதனை அல்லல் படுத்தும் ஆஸ்த்துமா நோய் தீர்வதற்கு வழிகள் ஏதும் ஏற்படுமா ?

## வைத்தியர்கள் கேள்வி

நுரையீரல்களிலுள்ள மூச்சுக் கிளைக்குழல்களில் ஏற்படும் நோய் ஆஸ்த்துமா. இது ஒரு நாட்பட்ட வகை நோய். திடீர் திடீரென்று மூச்சுவிடுவதில் சிரமத்தை உண்டுபண்ணும். இது தொற்று நோயல்ல.

அதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான ஆஸ்த்மா தாக்குதல்கள் லேசானவையாகவே இருக்கின்றன. இதில் ஆபத்தைவிட, அயர்ச்சியே அதிகம். நவீன மருத்துவ சிகிச்சை முறைகளின் மூலம் இதன் தொல்லையை நீக்கவோ அல்லது தடுத்துவிடவோ முடியும்.

கடுமையான தாக்குதலின் போது பாதிக்கப்பட்டவருக்கு மூச்சுத் திணறுவதைப் போன்று இருக்கும். அவர் முகம் வெளுத்து அல்லது உடல் நீல நிறமாகி, வியர்க்கும். மூச்சை உள்ளே இழுக்க தன் சக்தியையெல்லாம் திரட்டி முயற்சி செய்யவேண்டிவரும்: வெளியே விடவும் அதிக முயற்சி தேவைப்படும். கடுமையான தாக்குதல்களை மருத்துவரிடம் சென்று நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

## மருத்துவ விளக்கம்

### மூச்சுக் கிளைக்குழல்கள்

மூச்சுக் கிளைக் குழல்கள் எப்படி இயங்குகின்றன, எதற்காக இயங்குகின்றன என்பதைப்பற்றி சில குறிப்பிட்ட உண்மைகளை அறிந்து கொள்வது அவசியம். தொண்டையிலிருந்து நீளும் மூச்சுக் குழலுடன் இந்த மூச்சுக் கிளைக் குழல்கள் இணைந்துள்ளன. இவைகளின் மூலம் தான் மூக்கு அல்லது வாயினால் உள்ளிழுக்கப்படும் காற்று நுரையீரல்களைச் சென்றடைகிறது. இந்த மூச்சுக் கிளைக்குழல்கள் சற்றேறக்குறைய ஒரு மரத்தின் வேர்களைப்போல் பிரிந்து செல்கின்றன. பெரிய மூச்சுக் கிளைக்குழல்கள் சிறியவையாகவும், சிறியவை மேலும் சிறியவையாகவும் நாலிழை போன்ற வடிவை அடையும

இன்ஜெக்ஷன் மூலம்செலுத்தி நோயாளிக்கு மூச்சுக் கிளைக் குழல்களின் தசைகளில்இசிப்பு வராமல் விரைவாகத் தடுக்க முடியும். மூச்சுக் கிளைக் குழல்கள் வீங்கிப் பெருத்துவிட்ட கடுமையான கேசுகளில் நிவாரணம் மிகக் கடினமான காரியமாகிவிடும். கபக் கட்டினால் ஆஸ்த்துமா தாக்குதல் உண்டாகியிருந்தால் இருமுவதன் மூலம் கபத்தை வெளியேற்றிவிடலாம்.

சராசரி ஆஸ்த்துமா கேசுகள் பொதுவாக அபாயம் விளைவிக்காத தொந்தரவுகளாகவே இருந்துவருகின்றன. இருந்தபோதிலும், திரும்பத் திரும்பத் தாக்குதல் நேர்வதனால் அதிக முயற்சி செய்து சுவாசிப்பது, நுரையீரல் திசுக்களை நிரந்தரமாகச் சேதப்படுத்திவிடவும்கூடும். இப்படி ஆகிவிட்டால் பாதிக்கப்பட்டவருக்கு மூச்சுத் திணறலும் லேசான சோர்வும் இருக்கும்; அவரது சகிப்புத் தன்மை போய் விடும். அவரது இருதயத்திற்கு வேலைச் சுமை மேலும் கூடும். அவரது சேதமடைந்த நுரையீரல்களினூடே இரத்தத்தை விசையுடன் செலுத்த அவரது இருதயம் கடுமையாக உழைக்கவேண்டிவரும். கண்டதையெல்லாம் நமபுகிறவர்கள், ஆஸ்த்மா கேடு பயக்காத நோயாக இருந்தபோதிலும் தேவையற்ற பய உணர்வை வளர்த்துக்கொள்கிறார்கள். இந்த நோயையுடைய எவரும் நல்ல மருத்துவ ஆலோசனைகளைப் பெறறு அவற்றை வழுவாமல் பின்பற்றவேண்டும்.

### ஒவ்வாமைகள் (அலர்ஜி)

மூச்சுக்குழல் ஆஸ்த்துமாவிற்கு பல்வேறுபட்ட காரணங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை நிச்சயமாக ஒவ்வாமை என்னும் அலர்ஜியாலேயே வருகின்றன.

ஆஸ்த்துமா நோயாளிகளில் கிட்டத்தட்ட 75 வீதம் பேர்களுக்கு வெளியிலிருந்து அவர்

துமா தொல்லைகள் தோன்றுவதில்லை.

ஆஸ்த்துமா வந்த ஒருவர் முதலாவது அத்தகைய தாக்குதல்களுக்குக் காரணம் யாது என்பதைச் சோதித்துக் கண்டறிய வேண்டு.

இதற்கு நோயாளியின் ஒத்துழைப்பு தேவை. நோயாளி தானே ஒரு ''மருத்துவத்துப் பறிஞராகி'' டாக்டருக்குத் தேவையான தடயங்களை கொடுத்து உதவ வேண்டும். ஏனெனில், வீட்டிலோ அல்லது வேலை செய்யுமிடத்திலோ ஏதாவது குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்த பின்னர் ஆஸ்த்துமா தாக்குதல்கள் தொடருகின்றது.

ஆஸ்த்துமா இருந்தால் அதன் காரணத்தைக் கண்டுபிடித்து, நிரந்தரமான சேதங்கள் ஏற்படுவதற்குள் சிகிச்சையை ஆரம்பித்துவிட வேண்டும்.

ஒரு நல்ல மருத்துவரின் நவீன சிகிச்சை முறைகளினால் பெரும்பாலான ஆஸ்த்துமா கேசுகளுக்கு தகுந்த சிகிச்சையை அளிக்கமுடியும். தமக்குத் தாமே டாக்டர்களாகி, நோயறிகுறிகளைக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்துக்கொள்ள ஆரம்பிக்கிறவர்கள் தேவையில்லாத உடல் நலக் கேட்டையும், நிரந்தரமான கெடுதலுககு வழிவகுக்கும் அபாயத்தையும வர வைத்துக் கொள்கிறார்கள்.

### சீதோஷ்ண நிலை

ஒரு சில ஆஸ்த்துமா நோயாளிகளுக்கு சீதோஷ்ண நிலையில் மாற்றங்கள் தேவைப்படும். இவர்களுக்கு சாதாரண சிகிச்சை முறைகள் பயனளித்திருககாது. ஆஸ்த்துமா தொல்லை வர வர அதிகமாகிக் கொண்டே போகும், அல்லது இவர்களுடைய ஆஸ்துத்மாவிற்கு சளி மூக்கு உபாதுவார அழற்சி, மற்றும் மேல மூச்சுப் பாதையை பாதிக்கும் வேறு தொற்றுகளுடன தொடர்பு இருப்பது உண்டு. ஆஸ்த்துமா நோயாளிகளுக்கு ஏற்ற சிறந்த சீதோஷ்ண நிலை எது என்று அறிய பெருமபாலோர் விரும்புகிறார்கள். அதற்கு பதில் அளிப்பது மிகவும் கடினம. ஏனெனில, ஆஸ்த்துமா கேசுகள் ஒன்றைப்போல இன்னொன்று இருப்பதில்லை.

மையான, சதகதப்பான சூழ்நிலைகள் மிகவும் சாதகமாக இருக்கின்றன. மிகவும் வறண்ட, ஈரத்தன்மையற்ற காற்றுசிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை இருதயக் கோளாறுடன்ஆஸ்த்துமாவும்சேர்ந்து சிக்கலை விளைவித்து நபர்களுக்கு அளவுக்கு மீறிய வெம்மை அபாயமாகிவிடுவதுமுண்டு புதிய சீதோஷ்ண நிலைக்கு மாறிச் செல்ல முடிவெடுக்குமுன், டாக்டரைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

பலருடைய விஷயத்தில் ஆஸ்த்துமா குணப்படுத்தக்கூடியநோய. மற்றவர்களின் விஷயத்தில் நல்ல திறமை வாய்ந்த டாக்டர் ஒருவர் பெருமளவு நிவாரணத்தை அளிக்குமளவுக்குசிகிச்சையை அளிக்க முடியும். ஆகவே ஆஸ்த்துமாவின் அடையாளங்கள் தோன்றுமானால் உடனடியாக டாக்டரை நாடுங்கள் அல்லதுநல்ல மருத்துவமனையை நாடிச்சென்று பயனடையுங்கள். (சு)

நன்றி: நல்வழி

## இராசி பலன்

29-8-2000
(ஆவணி 13செவ்வாய்)
அமாவாசை
பி ப 4.38 வரை
மகம் மாலை 6.39 வரை
இராகுகாலம்
3.05-4.35
சுபநேரம் 10-35 12 05
அமாவாசை விரதம்

**மேடம்**

குடும்பக் கவலை, சிறு வியாதி, காரிய நன்மை, தெய்வ நம்பிக்கை.

**இடபம்**

வீண் சச்சரவு, உறவினர் நம்பிககையின்மை, பொருள் வரவு, முயற்சி பலிதம்.

**மிதுனம்**

வருமானம் அதிகம், குடும்ப சுகம், காரிய நன்மை, பிரயாண நன்மை.

**கடகம்**

நண்பர்களுடன் வீண்

திருக்குமானால் கருத்து முரண்கள் பேசித்தீர்க்கு மளவிற்கு சென்றிருக்கும். மாறாக சகோதரப் படு கொலைகள் ஒன்றுக்குள் ஒன்றாய் நிகழ்ந்து தொலைந்தன.

கறந்த பால் முலைக் கேறாது. இன்றாவது, இந்த நிலையிலாவதுநாம் ஒன்று பட முடியாதா?. என்றைக்குத்தான்எங்கள் மண்ணில் ஒற்றுமை மலரப்போகிறது. ஒவ்வொருவரும் காண விழைவது சுதந்திரமொன்றே. விடுதலையே. அல்லாத விடத்து பல்வேறு வரைவிலக்கணங்கள் சுதந்திரத்திற்கு உண்டா?.

மன்னிக்க வேண்டும். நாங்கள் தமிழர்களாச்சே. இருவர் ஓரிடத்தில் ஒரு கணமேனும் ஒற்றுமையாக இருக்காத இனமாச்சே. இந்தச் சாபக்கேட்டை மாற்றும் வரை எங்கள் பல வீனம் அம்பலப்படுத்தப்பட்டு விடுதலை இடைக்கப்போவதில்லைஎங்கள்உழைப்பும் உதிரமும் அவமே.

அன்புடன் ஆசிரியர்

---

யாகவும், சிறியவை மேலும் சிறியவையாகவும் நூலிழை போன்ற வடிவை அடையும வரைபிரிந்து பிரிந்து செல்கின்றன. பிறகு அவை ஒவ்வொன்றும் ஒரு காற்று நுண்ணறையுடன முடிவடைகின்றன. இங்குதான் நாம் சுவாசிக்கும் காற்றானது நுரையீரலுள் இரத்தத்தைக் கொண்டு வரும் மெல்லிய சுவர்களையுடைய தந்துகிகளோடு நெருக்கமாகத் தொடர்பு கொள்கின்றது. நுண்ணிய காற்றறைகளும். நுரையீரல் தந்துகிகளும மிக மிக முக்கியமான பகுதிகளாகும். இங்கு தான் காற்றிலுள்ள ஒட்சிசனானது இரத்தத்தைச் சென்றடைகிறது. இதே பகுதியில், அசுத்தக் காற்றான கார்பன்டைஆக்சைடு நுரையீரல்களிருந்து அகற்றப்பட்டு வெளியேற்றப் படுகின்றது. ஒரு மனிதன் ஒவ்வொரு நிமிடமும் பதினாறு முறைகள் காற்றை உள்ளிழுத்து வெளிவிடுகின்றான்.

ஆஸ்த்துமா தாக்குதலின் போது காற்றை உள்ளிழுப்பது கடினமாகிவிடுகின்றது. இது; அடைக்கப்பட்டுள்ள ஒரு குழாயின் வழியே காற்றைச் செலுத்த முயலுவதற்குஒப்பாகும். மூச்சுக்குழல் தசைகளில் இசிப்பு ஏற்படுவதாலும், மூச்சுக் குழலிலுள்ள கோழைப் படலம் உப்புவதாலும் இவ்வாறு நேரும்.

அதிர்ஷ்டவசமாக, அட்ரீனலினை ஹைபோடெர்மிக்

---

றன.

ஆஸ்த்துமா நோயாளிகளில் கிடடத்தட்ட 75 வீதம் பேர்களுககு வெளியிலிருந்து அவர்களுடைய உடலில் புகும் ஒனறுஅல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் அலர்ஜியாக இருக்கின்றன. இபபடிப்பட்ட பொருட்கள் பலப் பல! சில வகை உணவுகள், பறவைகளின் இறகுகள், முகப் பவுடர்கள, மிருகங்களின் கழிவுகள், இலவம் பஞ்சு, பூந்தாதுகள் போன்றவையும் இதில் அடங்கும்.

சிலருக்கு அவர்களுடைய உடல் நிலைகளினால் (கூச்ச உணர்வுகள்) அல்லது அவர்கள் உடலில் இருக்கும் பொருட்களினால் அலர்ஜி வரும். இப்படிப்பட்ட கேசுகள் பாக்டீரியா கிருமித் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து, குறிப்பாக மூக்கின் உள்துவார(சைனஸ்) தொற்று. தொண்டை மற்றும் மூக்கு சம்பந்தமான தொற்றுக்களைத்தொடர்ந்து வருகின்றன. இப்படிப்பட்ட நோயாளிகளில் பெரும் பாலோர், பக்டீரியா கிருமித்தொற்று மறைந்த பின்னர் குணம் பெற்றுவிடுவர், சளி, மூக்கு உள் துவார அழற்சி அல்லது மூக்குத் தொற்றுகள், தொண்டை மற்றும் மூச்சுக்குழல் தொற்றுகள் தோன்றாத அல்லது குறைவாகத் தோன்றுகிற சீதோஷ்ண நிலைகளில் நன்றாக இருப்பார்கள்; ஆஸ்த்

---

ஏனெனில், ஆஸ்த்துமா கேசுகள் ஒன்றைபபோல இன்னொன்று இருப்பதில்லை. ஆகவே பின்வரும ஆலோசனையைக் கருத்தில் கொள்வது நலம்.

மருத்துவரின் வழிகாட்டுதல் இல்லாமல் திடீரென்று சூழ்நிலையில் - சீதோஷ்ண நிலையில் பெரிய மாற்றங்களை செய்யவேண்டாம். முடியுமானால். ஒன்றிரண்டு ஸ்பெஷலிஸ்டுகளின கருத்தையும் விசாரித்துக் கொள்ளவும். அநேகமாக இந்தத் தொல்லைக்கு அவரவர் வீட்டுச் சூழலிலேயே வெற்றிகரமாக சிகிச்சை அளிக்க முடியும். நாட்டில் ஒரு இடம் விட்டு இன்னொரு இடம் சென்று வாழ்வதற்கு புதிய இடம் ஒன்றைக் கண்டுபிடிப்பதும், புதிய வேலையில் சேருவதும் அவ்வளவு எளிதல்ல. அதற்கு அவசியம் இருக்க முடியாது.

ஆஸ்த்துமா நோயாளிக்குச் சாதகமான சூழ்நிலையுள்ள இடங்கள் ஒருசில உள்ளன. அங்கு சராசரிஆத்மா நோயாளிகள் சென்று பயனடைய முடியும்.

ஒன்றிரண்டு ஆண்டுகள் சோதனை அடிப்படையில் சீதோஷ்ண நிலை மாற்றங்களை செய்து பாாக்கலாம். இருந்த போதிலும் ஆஸ்துமாவினால் அவதிப்படும் அநேகருக்கு வறட்சியான வெம்

---

**கடகம்**

நண்பர்களுடன் வீண் பிரச்சினை, முயற்சி தாமதம், தடுமாற்றம்.

**சிங்கம்**

உடல் நல சுகம், பணச் செலவு, துக்கமான செய்தி.

**கன்னி**

சென்ற இடத்தில் மதிப்பின்மை, விபத்து, காரிய நட்டம், சிறு லாபம்.

**துலாம்**

பண வரவு. சுவாரஷ்யம், புகழ் கிடைத்தல், காரிய நன்மை.

**விருச்சிகம்**

தொழில் மேன்மை, காரிய வெற்றி, பிரயாணம்.

**தனு**

மனக்கிலேசம், இடமாற்றம், சிறுவியாதி, பிரயாணம்

**மகரம்**

விபத்து, தேவையற்ற, சண்டை, பொருள் விரயம் செல்வாக்கின்மை.

**கும்பம்**

திருமணப் பேச்சு விருந்துபசாரம், பணவரவு, மனக் கஷ்டம்.

**மீனம்**

தொழில் முயற்சியில் தாமதம், காரிய நன்மை, மகிழ்ச்சியான சம்பவம்.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்


# ராஜா

யாழ்ப்பாணம்

நவரசநாயகன் கார்த்திக்
கௌசல்யா
அப்பாஸ் ராதாரவி
நடித்த

## பூவேலி

10.30, 2:00 [பு/நே]
(இ737)



# ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]

சரத்குமார் – மீனா
நடித்த

## மாயி

CD புதிய பிரதி
காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[இ 688]


### ஜனநாயக...

டியிடுகிறார்கள்.

வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள வேட்பாளர் விபரம்வருமாறு;

காசிப்பிள்ளை செந்திவேல், சோமசுந்தரம் தேவராஜா, கனகசபை தேவதாசன், சந்திரா நவரத்தினம், கனகசபாபதி நடனசபாபதி, அந்தோனிப்பிள்ளை ஜோசப் எட்வேட், உதயராணி தம்பையா, கார்த்திகேசு கணபதிப்பிள்ளை, சிவசம்பு ஞானேஸ்வரன், நாகலிங்கம் சிறிதரன், நீக்கிலாப்பிள்ளை அருட்பிரகாசம், கந்தையா அருட்பிரகாசம். (வ - 3)




## ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்

### தெல்லிப்பழை (இலங்கை)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்-2000

### 30-8-2000 முதல் 10-09-2000 வரை

துர்க்கை அம்பாள் அடியார்களே,

நிகழும் விக்கிரம ஆண்டு ஆவணித்திங்கள் 14 ஆம் நாள் (30-08-2000) புதன் கிழமை பூர்வ பட்சமும் பூர நட்சத்திரமும் கூடிய நல்லோரையில் முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்ற வைபவம் நடைபெறத் திருவருள் வாய்க்கப்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று பூர்த்தி தினமாகிய ஆவணித் திருவோணத்தில் 'துர்க்கா புஷ்கரணி' தீர்த்தத் தடாகத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறவும் அம்பாள் கருணை பாலித்துள்ளார். இம் மஹோற்சவ காலங்களில் அம்பாள் அடியார்கள் விரதமனுஷ்டித்து ஆலயத்துக்கு வருகை தந்து அம்பாளை வழிபாடு செய்து உய்தி அடைய வேண்டும் என்று அன்பாக வேண்டுகிறோம்.

## முக்கிய குறிப்புகள்

(1) கொடியேற்றம், கொடியிறக்கம் பொது உபயமாக நடைபெறுவது வழக்கமாகையால் இவ்வுபயத்திற்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) பணமாகவோ, பவுணாகவோ அரிசி முதலிய அன்னதானப் பொருட்களாகவோ, அல்லது பூசை உபகரணங்களாகவோ அன்பளிப்புச் செய்வோர் அனைவரும் நிதி அலுவலகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். கோயில் நிர்வாகம் தவிர்ந்த எவருக்கும் கோயில் பேரில் அன்பளிப்புப்பெற அனுமதி வழங்கப்படவில்லை. எந்த அன்பளிப்பும் கோயில் அலுவலகத்திலேயே செலுத்தப்பட வேண்டும். அல்லது கடிதமூலமோ, வங்கி மூலமோ கோயிலுக்கு அனுப்பப்பட வேண்டும்.

(3) கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடி அழித்தல், அங்கப்பிரதிட்டை பண்ணல் யாவும் வெளி வீதியில் நடைபெற வேண்டும். திருவிழாக் காலங்களில் பொங்கிப் படைத்தல், மற்றும் நேர்த்திகள், திருமணம், தனிப்பட்டவர் அபிஷேகம் ஆகியவை இடம் பெறாது என்பதை அறியத்தருகிறோம்.

(4) பெண்களும், குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு குறைத்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது.

(5) சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறாக உடைகள் அணிந்து வருதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

(6) கோயிற் தரிசனம் முடிந்தவுடன் அவரவர் தத்தம் இல்லங்களுக்குச் சென்றுவிடுவது விரும்பத்தக்கது. இரவு நேரங்களில் எவரும் கோயில வீதிகளில் தங்குவதோ பொழுது போக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.


## கூட்டுறவாளர் சுயேட். குழுவில் போட்டி?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேர்தல் களத்தில் கூட்டுறவாளர்கள் முன்னணியொன்று சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்குத்தயாராகி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பழம்பெரும் கூட்டுறவாளர்களும் தற்போது கூட்டுறவுதுறையின் முன்னணி கூட்டுறவாளர்களும் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளதாக தெரியவருகிறது. [வ-7]

### வடபகுதி...

படையாக வைத்தே புதிய அரசியல் யாப்பு ஒன்றின் மூலம் பிரச்சினைக்குரிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்தேன். இத் தீர்வுத் திட்டம்பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி நடந்து கொண்ட விதம் ஜனநாயகத்துக்கு பெரும் தலைக்குனிவை ஏற்படுத்தியது.

இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் தீர்த்துவைக்க வேண்டுமென விரும்புகிறார்கள். ஆனால் அப்படிக் கூறுபவர்களின் பிள்ளைகள் யுத்த களத்தில் இல்லாது பல்கலைக்கழகக் கல்வி கற்று வருகிறார்கள்.

யுத்த முனையில் இருக்கும் படையினருக்கு நல்லாசி வேண்டி பிரித்தோத பிக்குமாருக்கு விடுத்த அழைப்பை எவரும் ஏற்கவில்லை. அதன் பின் யுத்தத்தைக் கொண்டு நடத்துவதற்கு இளைஞர்களைத் திரட்டித்தருமாறு கேட்டேன் அதையும் அவர்கள் செய்யவில்லை. எனினும் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக பௌத்த குருமாருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (வ)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று கொடியேற்றம் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் மகோற்சவம் நடைபெறும். (ந)

### தேர்தல்...

களை அடுத்து சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் மீதும் அதனை எடுத்துச் செல்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இதே வேளை பொலிசார் சிவில் உடையில் செல்லும் போது ஆயுதங்களை தம்முடன் எடுத்துச் செல்லக் கூடாதென்றும் அவர்களுக்குப்பணிப்புரை விடுத்துள்ளார். (வ)

### 10 கேட்சிகள்...

ளது.

வவுனியா மாவட்டச் செயலகவளவுக்குள் முன் அனுமதி இன்றி எவரும் உட்செல்லமுடியாது. வவுனியாசெயலகத்தில் பணிபுரியும் அலுவலகங்கள் கூட பிரதான வாசலில் கடும் சோதனைக் குட்படுத்தப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா செயலகம் அமைந்துள்ள வீதியில் ஆயுதம் தாங்கியபொலிசார் காவல்கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (வ)


# கஜன்

## திரை

ஊர்காவற்றுறை

கார்த்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்

## கிழக்கு வாசல்

காட்சி நேரம்
பி.ப 6:30 மணி
(இ652)


### வேட்பாளர்..

பத்திரிகையாளர் எஸ். ஜெயானந்தமூர்த்தி விலகிக் கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது இடத்திற்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியநாதன் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## கண்ணீர் அஞ்சலி

27-08-2000 அன்று காலமான எமது நீண்டநாள்

(6) கோயிற் தரிசனம் முடிந்தவுடன் அவரவர் தத்தம் இல்லங்களுக்குச் சென்று விடுவது விரும்பத்தக்கது; இரவு நேரங்களில் எவரும் கோயில வீதிகளில் தங்குவதோ பொழுது போக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

**தேவஸ்தான கணக்கு உள்ள வங்கிகள்:**

இலங்கை வங்கி, சுன்னாகம் க/ கு இல. 3155
வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் க/ கு இல. 12692
இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி க/கு இல. 0037-02-0000397-4

தெல்லிப்பழை

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

(கி/760)

## கண்ணீர் அஞ்சலி

27-08-2000 அன்று காலமான எமது நீண்டநாள் நிர்வாக உறுப்பினரும், பொதுநலத் தொண்டனும் இளைப்பாறிய சுகாதார திணைக்கள உத்தியோகத்தருமான

**குரும்பசிட்டி அமரர் சி. இரத்தினம்**

அவர்களது குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்.

[1669]


வடக்கு - கிழக்கு இணைந்த பிரதேசத்தில்
எமக்கென விசேட அதிகாரங்கள் கொண்ட
மாநில சுய ஆட்சியே

# ஈழமக்கள் ஜனநாயக கட்சியின்

# இலக்கு! (ஈ. பி. டி. பி)

வீணையே உங்கள்சின்னம்! சேவையே எங்கள்எண்ணம்!!



1998ம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் சமூககலாச்சார அபிவிருத்திக்காக
(கி/736) 55 லட்சத்து 67 ஆயிரம் ரூபா ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible] 19 [illegible]